‘ஒன்பிளஸ் புல்லட் வயர்லெஸ் Z2’ இயர்போன் ஏப்ரல் 5 முதல் ஒன்பிளஸ்.இன், ஒன்பிளஸ் ஸ்டோர் செயலி, அமேசான்.இன், பிளிப்கார்ட்.காம், ஒன்பிளஸ் பிரத்யேக ஸ்டோர்கள் மற்றும் பிற மொபைல் போன் ஸ்டோர்களிடம் கிடைக்கும். அதன் விலை 1999 ரூபாய் ஆகும்.

‘ஒன்பிளஸ் புல்லட் வயர்லெஸ் Z2’ இயர்போன் ஏப்ரல் 5 முதல் ஒன்பிளஸ்.இன், ஒன்பிளஸ் ஸ்டோர் செயலி, அமேசான்.இன், பிளிப்கார்ட்.காம், ஒன்பிளஸ் பிரத்யேக ஸ்டோர்கள் மற்றும் பிற மொபைல் போன் ஸ்டோர்களிடம் கிடைக்கும். அதன் விலை 9,990 ரூபாய்.

### எஸ்.என்.எஸ் கல்லூரி சார்பாக

## என்.எஸ்.எஸ் முகாம்




எஸ்.என்.எஸ் கல்லூரியால் நடத்தப்பட்ட நாட்டு நலப்பணித் திட்ட நிறைவு விழாவின் போது.

தி கோவை மெயில்

டாக்டர் எஸ்.என்.எஸ் இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக வெள்ளமடை, சாமநாயக்கன்பாளையம், கஸ்தூரி நாயக்கன் பாளையம் ஆகிய கிராமங்களில் 7 நாட்கள் சிறப்பு முகாம் நடைபெற்றது.

எஸ்.என்.எஸ் நிறுவனங்களின் தலைவர் சுப்பிரமணியன், தாளாளர் மருத்துவர் ராஜலட்சுமி, செயலர் நளின் விமல் குமார், பாரதியார் பல்கலைக்கழகத்தின் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை, கல்லூரியின் முதல்வர் பிரேம் நசீர், துணை முதல்வர்கள் கதிரேசன், அனிதா மற்றும் பேராசிரியர் பழனிசாமி ஆகியோர் வழிகாட்டுதலின்படி முகாம் நடைபெற்றது.

நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் சுரேஷ் குமார், இளங்கோவன், சேமலா வசந்தா ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் நடந்த இச்சிறப்பு முகாமில் 150 மாணவ, மாணவியர்கள் களப்பணியில் ஈடுபட்டனர்.

பள்ளி வளாகம் தூய்மை செய்தல், மரக்கன்றுகள் நடுதல், கலைநிகழ்ச்சிகளின் வழி பொதுமக்களிடையே கொரோனா விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளைச் செய்ததோடு மின்சார சேமிப்பு, மண்வளப் பாதுகாப்பு போன்ற சமுதாய நலன் சார்ந்த பல்வேறு விழிப்புணர்வு பேரணிகளையும் மாணவர்கள் நடத்தினர்.

### எம்.ஜி.எம் மருத்துவமனையின்

## புற்றுநோய் சிகிச்சைகள் இப்போது கோவையிலும்!




புற்றுநோய் சிகிச்சை மையத்தின் துவக்க விழாவின் போது.

தி கோவை மெயில்

சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையான எம்ஜிஎம் ஹெல்த்கேர் தன்னுடைய முதலாவது புற்றுநோய் சிகிச்சை மையத்தை கோவையில் தொடங்கியுள்ளது.

எம்ஜிஎம் ஹெல்த்கேர் கோவையில் தன்னுடைய புற்றுநோய் சிகிச்சை மையத்தை தொடங்க, கோவை பொன்னையா மருத்துவமனையுடன் எம்ஜிஎம் ஹெல்த்கேர் கூட்டுறவு மேற்கொண்டுள்ளது.

எழுத்தாளர், பெண்ணியவாதி மற்றும் பொதுப் பேச்சாளர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன், எம்ஜிஎம் ஹெல்த்கேரின் மார்பகபுற்றுநோய் மற்றும் ஆன்கோபிளாஸ்டி மூத்த நிபுணர் டாக்டர் வேதா பத்மபிரியா. பொன்னையா மருத்துவமனையின் டாக்டர் கோபிநாத், சென்னை எம்ஜிஎம் ஹெல்த்கேர் புற்றுநோய் அறுவைசிகிச்சை துறையின் மூத்த நிபுணர் டாக்டர் சிவகுமார் மகாலிங்கம், பொன்னையா மருத்துவமனையின் மருத்துவர் மனோபிரியா ஆகியோர் முன்னிலையில் இந்த மையம் திறந்து வைக்கப்பட்டது.

தொடக்க விழாவின் போது டாக்டர் வேதா பத்மபிரியா பேசுகையில், எம்ஜிஎம் ஹெல்த்கேர் மற்றும் பொன்னையா மருத்துவமனை இணைந்து மேமோ ஆன் வீல்ஸ் மற்றும் புற்றுநோய் மருத்துவமனையைக் கோவையில் தொடங்கியுள்ளன. மேமோ ஆன் வில்ஸ் மூலம் மக்களை அவர்கள் வீட்டு வாசலுக்கே சென்று மார்பக புற்றுநோய் உள்ளதா என்று பரிசோதனை செய்ய முடியும் என்றார்.

தொடக்க விழாவின் போது டாக்டர் சிவகுமார் மகாலிங்கம் பேசுகையில், “கோவையில் அடியெடுத்து வைத்திருப்பதிலும் பெருமிதம் கொள்கிறோம். இந்த மருத்துவ மையம் மூலம் மிகச் சிறந்த சேவை வழங்க உள்ளோம். கோவை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள மக்கள் தரமான மிகவும் கட்டுப்படியான விலையில் மருத்துவ சேவையைப் பெறுவதே இந்த மையத்தை தொடங்குவதன் பின்னணி நோக்கம்.

நோயாளிகளின் முதல் அணுகுமுறையை நாங்கள் முழுமையாக நம்புகிறோம். இது எங்களின் நிபுணத்துவத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள உதவியாக இருக்கும். எதிர்காலத்தில் இது போன்று மேலும் பல வெளிப்புற மையங்களை அமைக்க திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் மேம்பட்ட உயர் தொழில்நுட்பங்கள் கொண்ட மையங்கள் நோயாளிகளுக்கு மிக அருகிலேயே கொண்டு வருவோம்” என்றார்.

## இந்துஸ்தான் கல்லூரியில் வேலை வாய்ப்பு கருத்தரங்கு

தி கோவை மெயில்

கோவை மாவட்டம் ஒத்தக்கால் மண்டபத்தில் அமைந்துள்ள இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழிநுட்ப கல்லூரியில் வேலை வாய்ப்பு வழிகாட்டுதல் கருத்தரங்கம் நடைபெற்றது.

விழாவிற்கு கல்லூரியின் முதல்வர் ஜெயா தலைமை தாங்கி வரவேற்புரை ஆற்றினார். கல்லூரியின் முதன்மை செயல் அதிகாரி கருணாகரன் மற்றும் டீன் மகுடேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சிக்கு கேரியர் கைடன்ஸ் அமைப்பின் நிறுவனர் ஜெயபிரகாஷ் காந்தி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, பொறியியல் துறையில் உள்ள வேலை வாய்ப்புகள் எனும் தலைப்பில் மாணவர்களிடையே உரையாற்றினார். இதில் முதலாமாண்டு முதல் நான்காமாண்டு வரை பயிலும் 15 க்கும் மேற்பட்ட துறைகளை சேர்ந்த சுமார் 4000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர் பேசுகையில், மாணவர்கள் எவ்வாறு அதிக ஊதியம் கிடைக்கக்கூடிய தொழில்நுட்ப துறை வேலைகளுக்கு தங்களை தயார் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தகவல்களை கூறினார்.

நிகழ்ச்சியில் கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், இணைச்செயலாளர் பிரியா சதீஸ் பிரபு, அனைத்து துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

இந்தவார மின்னும் நட்சத்திரம்

## V.கீதாலட்சுமி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்






படங்கள் : சதீஷ் பாபு

## இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா



பட்டமளிப்பு விழாவில் (இடமிருந்து வலம்) கருணாகரன், சிறப்பு விருந்தினர் சந்தியா சிந்தால ருக்குமணி பார்த்தசாரதி, பட்டம் பெற்ற மாணவி, சரஸ்வதி கண்ணையன், ஜெயா.

தி கோவை மெயில்

இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழிநுட்ப கல்லூரில் 17 வது பட்டமளிப்பு விழா சமீபத்தில் நடைபெற்றது.

விழாவில் கல்லூரி முதல்வர் ஜெயா வரவேற்புரை நிகழ்த்தி ஆண்டு அறிக்கை வாசித்தார்.

இவ்விழாவுக்கு தேசிய மென்பொருள் சேவை நிறுவனங்கள் (நாஸ்காம்) கூட்டமைப்பின் துணை தலைவர் சந்தியா சிந்தால ருக்குமணி பார்த்தசாரதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அண்ணா பல்கலைக்கழக அளவில் தேர்ச்சி பெற்ற 1263 மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். மேலும் பல்கலைக்கழக ரேங்க் பெற்ற 12 மாணவர்களுக்கு கேடயங்களும் பரிசுத் தொகைகளையும் அவர் வழங்கினார்.

சிறப்பு விருந்தினர் பேசுகையில், இந்துஸ்தான் கல்லூரி மாணவர்கள் மற்றும் Ministry of Electronics and Information Technology and NASSCOM Future Skill Prime இல் இணைந்து படைத்த சாதனைகளையும் அதற்கு மேற்கொண்ட முயற்சிகளையும் பாராட்டினார்.

இந்துஸ்தான் கல்வி குழுமத்தில் மாணவர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை மேற்கொண்டு, 16000 க்கும் மேற்பட்ட சான்றிதழ்களை பெற்று தேசிய அளவில் சாதனை படைத்துள்ளனர். இச்சாதனை புரிந்த கல்லூரி நிர்வாகத்தையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் பாராட்டினார்.

மேலும் Disruptive Technology, AI and ML போன்ற திறன்களை தொடர்ந்து கற்க அறிவுறுத்தினார். நாட்டின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து பங்களிப்பையும் மாணவர்கள் சமுதாய சேவை மனப்பான்மையுடன் ஆற்ற வேண்டும் என்று கூறினார்.

கல்லுரியின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் பேசுகையில், தற்போது படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு துறை சார்ந்த புதிய தொழில்நுட்பங்களை அவர்கள் பாடத்திட்டத்தில் இணைப்பதற்கு உங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று கூறினார்.

பட்டமளிப்பு விழாவில் இணைச் செயலாளர் பிரியா சதிஷ் பிரபு, முதன்மை செயல் அதிகாரி கருணாகரன், முதல்வர் ஜெயா, பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## கே.பி.ஆர் கல்லூரியில் வேலை வாய்ப்பு தின விழா



மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கிய போது எடுக்கப்பட்ட குழு புகைப்படம்

தி கோவை மெயில்

கே.பி.ஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் வேலை வாய்ப்பு தின விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவிற்கு கே.பி.ஆர் கல்வி நிறுவனங்கள் மற்றும் குழும நிறுவனங்களின் தலைவர் கே.பி. ராமசாமி தலைமை தாங்கினார். இந்த விழாவில் கல்லூரி முதல்வர் அகிலா வரவேற்புரை நிகழ்த்தினார்.

கே.பி.ஆர் குழும நிறுவனங்களின் தலைவர் கே.பி. ராமசாமி பேசும்பொழுது, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறைக்காக அனைத்து வசதிகளும் முன்னணி மென்பொருள் நிறுவனத்தின் சார்பாக ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார். இந்த வசதிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த வருடம் 450 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு வாங்கிக் கொடுத்தது குறித்து தனது மகிழ்ச்சியை தெரிவித்தார். இது இறுதியாண்டு மாணவர்கள் உடைய எண்ணிக்கையில் 93 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

மீதமுள்ள 7 சதவீதம் மாணவர்களுக்கு வருகிற இரண்டு மாதத்தில் முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்று தரப்படும்.

வேலைவாய்ப்பு பெற்ற மாணவர்கள் விப்ரோ, டிசிஎஸ், இன்போசிஸ், எபிசோட், ஜோகோ போன்ற முன்னணி பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான நிறுவனங்களில் பணி நியமன ஆணைகளை பெற்றுள்ளார்கள்.

இந்த விழாவில் இன்போசிஸ் மனிதவள மேம்பாட்டுத் துறையின் தலைவர் கௌதம் பிரேம்குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில், மாணவர்கள் தங்களுடைய தொழில் வாழ்க்கை பயணத்தை தொடங்குவதன் முதல்படி முதல் வேலை என குறிப்பிட்டார். அதன் பிறகு ஒவ்வொரு நிலையிலும் நிறுவனத்தால் எதிர்பார்க்கப்படும் நல்ல குணநலன்கள் பற்றியும் மாணவர்கள் முடிக்க வேண்டிய சான்றிதழ் படிப்புகள் குறித்தும், தொழிற்சாலைச் சூழல், உதாரணங்கள் பற்றி விவரித்தார். மாணவர்களுடைய தன்னம்பிக்கையும் மேலும் மிக விரைவாக முன்னேறுவதற்கு தேவையான மன உறுதியும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## மகளிர் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்



சூலூர் கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் பணிபுரியும் மகளிர்களுக்கு பாதுகாப்பு சட்டம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை பற்றி விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதில் சூலூர் காவல் நிலைய ஆய்வாளர் மாதையன், உதவி ஆய்வாளர் நவநீதகிருஷ்ணன் மற்றும் சூலூர் கே.எம்.சி.ஹெச் மருத்துவர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## தி காஷ்மீர் ஃபைல்ஸ்; ஓர் கண்ணீர் காவியம்

- இயகோகா சுப்பிரமணியம்

தி கோவை மெயில்

'ஆவோ, ஆவோ உக்கிரவாதி (வாய்யா, வாய்யா தீவிரவாதி) என்று எனது நண்பர் அவரைக்காணவந்த இன்னொரு நண்பரை வரவேற்று, எனக்கு அறிமுகப்படுத்துகிறார். இருவருமே சொந்த நாட்டு அகதிகள். ஆம் காஷ்மீர் பண்டிட்டுகள். இது நடந்தது இருபத்தைந்து வருடங்களுக்கு முன் டெல்லியில்.

காஷ்மீரிலிருந்து இந்துக்களின் கட்டாய வெளியேற்றத்தைப் பற்றி நான் ஓரளவு கேள்விப்பட்டிருந்தாலும், அதன் பயங்கரத்தை, நண்பர் சொல்லிய போது அதிர்ந்து போனேன். டெல்லியில் இருந்த அகதிகள் முகாமுக்குச் சென்று ஒரு ரவுண்ட் அடித்துவிட்டுத் திரும்பினேன்.

பூலோக சொர்கமான காஷ்மீர், அழகிய சூழலில், நன்றாக வாழ்ந்த கண்ணியமான மக்கள், வசதியே இல்லாத கொட்டகைகளில், தாங்கமுடியாத வடுக்களைத் தாங்கிக்கொண்டு இருந்த கொடுமை சொல்ல இயலாது.

மிகப்பெரிய பீப்பாய்களில் ரொட்டி, சப்பாத்தி, இன்னொன்றில் காய்கறிகள், வெறும் வெங்காயமென, வரிசையில் நின்று அமைதியாக அவர்கள் வாங்கி உண்ட காட்சி இன்னும் கண்முன்னால்.

கொங்கு மண்ணிலிருந்து, அருகிலுள்ள சாம்ராஜ் நகர் மைசூர் சென்று அங்கு பூமியைக் குத்தகைக்கு எடுத்து, அற்புதமாகப் பயிர்செய்து நன்கு வாழ்ந்த தமிழர்களை, ஒரு சில கன்னட வெறியர்கள் விரட்டி அடித்து, ஓடி வந்து உயிர்காத்த நம்மவர்களை இன்று இந்த மண்ணில் எத்தனை பேருக்கு தெரியும். சமீபத்தில் நம் வாழ்நாளில் நமக்குத் தெரிந்து நடந்த, இந்த மோசமான நிகழ்வே மூடிமறைக்கப்பட்ட போது,



எங்கோ தொலைவில் உள்ள காஷ்மீர் இந்துப் படுகொலைகள் கண்டும் காணாமல் விடப்பட்டது ஒன்றும் ஆச்சரியமல்ல. இந்தப் பின்னணியில் இன்று திரையரங்குகளில், குறிப்பாக வடநாட்டில் சூறாவளியாகத் திரையிடப்பட்டிருக்கும் "தீ காஷ்மீர் ஃபைல்ஸ்" என்ற இந்தித் திரைப்படம் பற்றிய எனது கண்ணோட்டத்தைப் பதிவு செய்யவே இந்த கட்டுரை.

விவேக் அக்னிஹோத்ரி, அவரது மனைவி பல்லவி ஜோஷி இணைந்து பல உண்மைகளை ஆராய்ச்சி செய்து, பல ஆண்டுகளாக தயாரிப்பில் இருந்த அற்புதமான படம். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தப்பிய லட்சக்கணக்கான அப்பாவி மக்களின் உண்மை கதை. தீவிரவாதிகள் துப்பாக்கிகளோடு வீட்டுக்குள் நுழைகிறார்கள். கணவன் தப்பிப்பதற்காக அரிசி பீப்பாய்க்குள் பதுங்குகிறான் வெறித்தனமான கூட்டம் மனைவியை மிரட்டுகிறது, குழந்தை பயத்தோடு பதுங்குகிறது, பக்கத்துவீட்டுக்காரன் சைகையில் எங்கே ஒளிந்து இருக்கிறான் என சுட்டிக்காட்ட துப்பாக்கி குண்டுகள் அந்த பீப்பாயை துளைத்து எடுக்கின்றன. கணவனது ரத்தமும் அரிசியும் கலந்த கலவையாய் எடுத்து மனைவியை பலவந்தமாக உண்ண சொல்கிறான் "உண்டால் உன்னையும் குழந்தையையும் உயிரோடு விடுகிறேன்" என்கிறான் அவள் உண்பதை நாம் உணருகிறோம்.

இந்தக் காட்சியிலிருந்து ஆரம்பமாகும் படம் சுமார் இரண்டே முக்கால் மணி நேரம் நம்மை ஒரு மீளமுடியாத, பயங்கரத்தில் சுற்ற விடுகின்றது. காஷ்மீரில் நடந்தது யாருக்கும் முழுதாகத் தெரியாது. அதனால் சாதாரண மக்கள் இதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட பண்டிட்டுகள் யாரிடமும் தாமாகச் சென்று இதைத் தம்பட்டமடிக்கவில்லை. எனவே இந்தக் கதையில் வரும் கதாநாயகன், தான்படித்த ஏஎன்யு பல்கலைக்கழக இடதுசாரி ஆசிரியையின் தவறான வழிகாட்டுதலால் - காஷ்மீர் பண்டிட்டுகள் தாமாக வெளியேறினார்கள்.

காஷ்மீர் முஸ்லீம்களுக்கு இந்தியாவிலிருந்து விடுதலை வேண்டும் என்ற கண்ணோட்டத்தோடு தனது சொந்த ஊருக்குச் செல்வதாக கதை.

அப்படி செல்லும் போது தான், உண்மை கொஞ்சம் கொஞ்சமாக அவனுக்கு மட்டுமின்றி, திரைப்படம் பார்க்கச் செல்லும் அனைவருக்கும் புரிகின்றது.

தப்பி வரும் மக்கள் கூட்டம், ஒரு டிரக்கில் வரும்போது வயது வந்த பெண் அவசரமாகச் சிறுநீர் கழிக்க வேண்டும்.

கீழே இறங்கினால் என்ன ஆபத்து வருமோ என்ற பதட்டம். போர்வையால் மறைத்து மிகுந்த கூச்சத்தோடு அவள் அங்கே ஓரத்தில் சிறுநீர் கழிக்கிறாள். நிமிர்ந்து பார்த்தபோது சாலையோர மரத்தில் இரண்டுபேரைத் தொங்கவிட்டிருக்கின்றார்கள் பிணமாக. நாமும் உறைந்து போகிறோம். வன்முறையின் கோரத்தாண்டவம் நம்மில் ஆணி அடித்த மாதிரி பதிகின்றது.

க்ளைமேக்ஸ் காட்சியில் கதாநாயகன் காஷ்மீரின் பாரம்பரியத்தை, பெருமைகளை, இந்துமத நாகரீகத்தின் மெஞ்ஞான, விஞ்ஞான, சிவமயமான அற்புத வாழ்க்கை அமைப்பின் கலாச்சாரத் தொட்டிலின் சுகமான ஆட்டத்தை துரத்தியடிக்கப்பட்ட சோகத்தை விவரிக்கும்போது, நமது உடல் சிலிர்ப்பையும், கண்ணீரையும் கட்டுப்படுத்தவே முடியாது.

இறுதி காட்சியில் 20 பேருக்கு மேல் வரிசையாக பண்டிட்டுகள் நிற்கவைத்து எண்ணிக்கை சொல்லிச் சுட்டுத் தள்ளும் தீவிரவாதி ஆறுவயது பையனையும் சுட்டுத்தள்ளுகிறான்.நெற்றிக் காயத்தோடு அந்த சிறுவனின் குளோசப் காட்சியுடன் படம் நிறைவுறுகின்றது.

ஆடல், பாடல், நகைச்சுவை, குத்தாட்டம் எதுவுமே இல்லாமல் முழுக்க முழுக்க காஷ்மீர் பண்டிட்டுகளின் அவலங்களை தீவிரவாதிகளின் தேசத் துரோகக் கொடூரங்களை மட்டுமே எடுத்துரைக்கும் இந்தப் படம் சிண்ட்லர்ஸ் லிஸ்ட் படத்தைவிடவும் மேலானது என்று நான் துணிந்து கூறுவேன்.

இந்த நாட்டுப் பிரதமர் மோடி, இந்த திரைப்படத்தின் தாக்கத்தைப் பற்றி பேசியதைக்கூட ஏதோ அரசியல் லாபத்துக்காக பேசுகிறார் என்று கொச்சைப்படுத்தும் அநேக அரசியல்வாதிகள் பாவம் இந்த படத்தின் வெற்றி அவர்களுக்கு பாடம் தரும்.

'காஷ்மீர் ஃபைல்ஸ்' முடிவில் என்ன சொல்கிறது, யாரையும் வெறுக்கவோ ஆயுதம் ஏந்தவோ சொல்லவில்லை. நடந்ததை மனதில் பதியும்படி, உண்மையை உரக்கச் சொல்லி உள்ளது.

இந்தப் படம் எல்லா மொழிகளிலும் 'டப்' செய்யப்பட்டு திரைக்கு வந்தால் நிறைய பேர் பார்த்து பயன்பெறுவார்கள் அல்லது OTT - ல் அமர்ந்து பார்க்க இன்னும் சில நாள் காத்திருக்கலாம். மொத்தத்தில் திரையில் இது போன்ற படங்கள் அத்தி பூத்தாற் போல என்றாவது வரும். அப்படி ஒரு அதிசயத்தை இந்தப்படம் ஏற்படுத்தி உள்ளது.

# என்ன ஆகும் வன்னியர் இடஒதுக்கீடு?

சாணக்கியன்
தி கோவை மெயில்

வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கி எடப்பாடி தலைமையிலான அதிமுக அரசு நிறைவேற்றிய சட்டம் செல்லாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கும் நிலையில், வன்னியர் இடஒதுக்கீடு என்னவாகும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

வடதமிழகத்தில் அடர்த்தியாக வாழும் வன்னியர் சமூகத்தினருக்கு தனி இடஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கை 1950 களில் இருந்தே ஒலிக்கத் தொடங்கினாலும், வன்னியர் சங்கத்தை நிறுவி 1980 களில் இடஒதுக்கீடு போராட்டத்தை மருத்துவர் ராமதாஸ் தீவிரப்படுத்திய பின்னர் தான் இந்த விவகாரம் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.

எம்.ஜி.ஆர் காலத்தில் போராட்டம் அடக்கப்பட்டு, ராமதாஸ் ஓய்ந்து இருந்த காலகட்டத்தில் 1989 இல் ஆட்சிக்கு வந்த மு.கருணாநிதி, வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பதற்காக 50 சதவீதம் கொண்ட பிற்பட்டோர் தொகுப்பில் இருந்து 20 சதவீதத்தை தனியாக பிரித்து வன்னியர்கள், இசை வேளாளர், பரதர்கள் (மீனவர்), பர்வதராஜ குல மீனவர், வண்ணார், நாவிதர், குயவர், ஒட்டர், போயர், குரும்பக்கவுண்டர், சீர்மரபினர்களான கள்ளர், பிரமலை கள்ளர், கொண்டையங்கோட்டை மறவர், செம்பரத்து மறவர், வலையர்கள், அம்பலக்காரர், வேட்டுவ கவுண்டர், தொட்டிய நாயக்கர், ஊராளி கவுண்டர் உள்பட 108 சாதிகளை மிகவும் பிற்பட்டோர் தொகுப்பை (எம்.பி.சி.) உருவாக்கினார்.

அப்போது பேரவையில் பேசிய கருணாநிதி, 50 சதவீதமாக இருந்த பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டில் 3 முதல் 4 சதவீத இடங்களை பெற்று வரும் வன்னியர்களுக்கு இனிமேல் 6 முதல் 7 சதவீத வாய்ப்பு கிடைக்கும் என்றார். ஆனாலும், திருப்தி அடையாத ராமதாஸ், முழு மாங்கனி கேட்ட எங்களுக்கு அழுகிய மாங்கனியை கொடுத்துவிட்டார் கருணாநிதி என விமர்சனம் செய்தார்.

**ராமதாஸ் கோரிக்கை:** தொடர்ந்து வன்னியர்களுக்கு 20 சதவீத ஒதுக்கீடு கோரிக்கையை அடுத்தடுத்து வந்த அதிமுக, திமுக அரசுகளிடம் வைத்துக்கொண்டே இருந்தார். இந்நிலையில், கடந்த டிசம்பரில் இதே கோரிக்கையை வைத்து மீண்டும் போராட்ட அஸ்திரத்தை எடுத்தார் ராமதாஸ்.

தேர்தல் நேரத்தில் எழுந்த இக்கோரிக்கையை நிறைவேற்ற சாதிவாரி கணக்கெடுப்புக்காக நீதிபதி குலசேகரன் குழுவை அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி நியமித்தார். இக்குழுவின் அறிக்கை வர 6 மாத காலம் ஆகும் நிலையில், தேர்தலுக்கு முன்பாக வன்னியர்களுக்கு 12 சதவீத உள்ஒதுக்கீடாவது வழங்க வேண்டும் என்று தனது நிபந்தனையை தளர்த்தினார்.

ராமதாஸின் கோரிக்கையை முதல்வர் எடப்பாடி பழனிசாமி கடைசி நேரத்தில் ஏற்றுக்கொண்டு வன்னியர்களுக்கு மட்டுமன்றி பிற எம்.பி.சி. பிரிவினரும் பயனடையும் வகையில் எம்.பி.சி. தொகுப்பை மூன்றாக பிரித்து அதற்கான மசோதாவை பேரவையில் நிறைவேற்றினார்.

அதன்படி, வன்னியர், வன்னியா, வன்னிய கவுண்டர், கவுண்டர், படையாச்சி, பள்ளி, அக்னிகுல சத்திரியர் என 7 உள்பிரிவுகளை அடக்கிய வன்னியர்குல சத்திரியர் சமூகத்துக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு கிடைக்கும் வகையில் ஒரு தொகுப்பும், அம்பலக்காரர், பிரமலை கள்ளர், மறவர், சேர்வை, செம்பநாட்டு மறவர், ஊராளி கவுண்டர், வலையர், வேட்டுவ கவுண்டர், மீனவர் உள்பட 68 சீர்மரபினர் மற்றும் தொட்டிய நாயக்கர், வண்ணார், ஒட்டர், வலையர், போயர் உள்பட 25 எம்.பி.சி. பிரிவினர் ஆகியோருக்கு 7 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டது.







இதை தவிர மேலும் 22 எம்.பி.சி. பிரிவினரை தனியாக பிரித்து 2.5 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இது சாதிவாரியான கணக்கெடுப்பு வரை அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது. சட்டப்பேரவையின் கடைசி கூட்டத்தொடரில் கடைசி நாளில் இந்த சட்டமசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் அனுமதியும் அப்போது பெறப்பட்டது.

எம்.பி.சி. தொகுப்பு பிரிக்கப்பட்ட விவகாரம் அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு தனிப்பட்ட முறையில் வெற்றி என்ற வகையிலும், ராமதாசுக்கு ஓரளவு என்ற வகையில் அமைந்தது. எடப்பாடி தொகுதியில் மக்களவைத் தேர்தலின்போது அதிமுக 8,000 வாக்குகள் திமுகவைவிட பின்தங்கியிருந்த நிலையில், வன்னியர் இடஒதுக்கீடு காரணமாக எடப்பாடி பழனிசாமி சுமார் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். ஆனால், வடதமிழகம் முழுவதும் இது அதிமுகவுக்கு எதிராக வன்னியர் தவிர்த்த பிற சாதியினரை திருப்பிவிட்டது.

எம்பிசி தொகுப்பை மூன்றாக பிரித்தது தமிழக அரசியல் வரலாற்றில் சமூகநீதிக்கான மற்றொரு மைல் கல் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால், 7 சதவீத தொகுப்புக்குள் இருக்கும் சீர்மரபினர்களையும், அரசியல் ரீதியாக குரல் கொடுக்க ஆதரவு இல்லாத வலையர், வண்ணார், ஒட்டர், போயர், தொட்டிய நாயக்கர், மீனவர் போன்றவர்களையும் இந்த 7 சதவீத தொகுப்புக்குள் அடக்கியதால் அவர்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த இடஒதுக்கீடு முறையால் பாதிக்கப்பட்ட பிரமலை கள்ளர், மறவர் சமூகத்தினர் உயர் நீதிமன்றத்தில் மதுரை கிளையில் வழக்குத் தொடர்ந்து இந்த இடஒதுக்கீட்டுக்கு தடை பெற்றனர். இதை எதிர்த்து தமிழக அரசு, பாமக உள்ளிட்ட பல்வேறு தரப்புகள் மேல்முறையீடு செய்தன. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் ஒரு சமூகத்துக்காக இடஒதுக்கீடு வழங்கியது தவறு என்றும், இந்த இடஒதுக்கீடு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை அளித்த தீர்ப்பு செல்லும் என உத்தரவிட்டுள்ளது.

எடப்பாடி பழனிசாமி காலத்தில் வன்னியர் இடஒதுக்கீடு எப்படி சாத்தியமானது என்பதை ஆய்வு செய்து பார்த்தால் இந்த இடஒதுக்கீட்டை உச்ச நீதிமன்றம் தடை செய்ததில் இருக்கும் உண்மையான காரண காரியங்கள் வெளியாகும். பொதுவாக இடஒதுக்கீடு என்பது சமூக நீதி அடிப்படையாக கொண்டுவரப்படுகிறது என வெளிப்படையாக சொல்லப்பட்டாலும், அதன் உள்ளே புகுந்து ஆய்வு செய்தால் அரசியல் ரீதியான காரணங்கள் இருப்பதை தெரிந்துகொள்ளலாம்.

எடப்பாடி பழனிசாமி அரசு காலத்தில் வழங்கப்பட்ட இடஒதுக்கீடு விவகாரத்தை ஆய்வு செய்தால் பல்வேறு சமூகங்களுக்கான சமூக நீதியை குழிதோண்டி புதைத்துவிட்டு முழுக்க முழுக்க வன்னியர் வாக்குகளை குறிவைத்து இடஒதுக்கீடு கொண்டுவரப்பட்டது என்பதை முழுமையாக தெரிந்துகொள்ளலாம்.

2019 மக்களவைத் தேர்தலின்போது 50 சதவீதத்துக்கும் மேல் வன்னியர்கள் வாழும் எடப்பாடி சட்டப்பேரவைத் தொகுதியில் அதிமுக 8,300 வாக்குகள் பின்னடைவை சந்தித்திருந்த நிலையில், வன்னியர் இடஒதுக்கீடு கொண்டுவந்த பிறகு 2021 பேரவைத் தேர்தலில் 93,000 வாக்குகளில் அதிமுக வெற்றி பெற்றிருக்கிறது.

அதேபோல, கொங்கு வேளாளர்கள், வன்னியர்கள் அடர்த்தியாக வாழும் சேலம் மாவட்டத்தில் 11 பேரவைத் தொகுதிகளில் 10 இடங்களிலும், தருமபுரி மாவட்டத்தில் மொத்தமுள்ள 5 தொகுதிகளிலும் அதிமுக கூட்டணி வெற்றிபெற வன்னியர் இடஒதுக்கீடு தான் கைகொடுத்தது என்பதை பார்க்கும்போதும், வடதமிழகத்தில் வன்னியர்களின் வாக்குகளில் 90 சதவீதத்துக்கு மேல் அதிமுக கூட்டணி பெற்றிருப்பதை பார்க்கும்போதும், வன்னியர் இடஒதுக்கீடு மசோதாவை எடப்பாடி பழனிசாமி அரசு கடைசி நேரத்தில் அவசர அவசரமாக எதற்காக கொண்டுவந்தது என்பது தெள்ளத்தெளிவாக புரியும்.

தனி ஒதுக்கீடு கோரி ராமதாஸ் போராட்டம் நடத்தி வந்த காலத்தில், 2020 டிசம்பர் மாதத்தில் கூட சாதி வாரி கணக்கெடுப்பை நடத்த நீதிபதி குலசேகரன் தலைமையிலான ஆணையத்தை அமைத்தார் எடப்பாடி பழனிசாமி. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்திய பின்னர்தான் இடஒதுக்கீடு சட்டத்தில் திருத்தம் செய்ய முடியும் என்ற உறுதியான முடிவில் இருந்தார் எடப்பாடி பழனிசாமி. ஆனால், உள்கட்சியில் அரசியல் எதிரியான சசிகலா சிறையில் இருந்து வெளிவந்ததும் ஜனவரிக்கு பின் தனது நிலைப்பாட்டை எடப்பாடி பழனிசாமி மாற்றிக்கொள்ளும் நிலை உருவாது.

உள்கட்சி எதிரியான சசிகலாவை சமாளிக்கவும், வடதமிழகத்தில் இருக்கும் தனது ஆதரவாளர்களான சி.வி.சண்முகம், சம்பத், வீரமணி போன்ற வன்னியர் சமூகத்தை சேர்ந்த அதிமுகவின் இரண்டாம் கட்டத் தலைவர்களை திருப்திப்படுத்தவும் தனது அரசின் பதவிகாலம் முடியும் கடைசிநாளில் வன்னியர் இடஒதுக்கீட்டை அவசர அவசரமாக நிறைவேற்றினார் எடப்பாடி பழனிசாமி.

அதேபோல, உள்ஒதுக்கீட்டை பெற்றுக்கொண்டு ராமதாஸ், தனக்கு மட்டுமே அரசியல் லாபத்தை பெற்றுவிடக்கூடாது என்பதற்காக கூட்டணிக்குள் 23 தொகுதிகளை மட்டுமே பாமகவுக்கு ஒதுக்கி ராஜதந்திர முடிவை எடப்பாடி பழனிசாமி எடுத்தார். இருப்பினும் எடப்பாடி பழனிசாமி எடுத்த முடிவு சமூகநீதி பார்வையின்றி தேர்தல் வாக்கு வங்கியை மையமாக வைத்து முழுக்க முழுக்க அரசியல் காரணங்களுக்காகவே எடுக்கப்பட்டது.

இதனால், 20 சதவீத எம்.பி.சி. தொகுப்பு 10.5 சதவீதமாக பிரித்து வன்னியர்களுக்கும், 2.5 சதவீதமாக பிரித்து இசை வேளாளர்கள், கோவை செட்டியார் உள்ளிட்ட சமூகங்களுக்கும், மீதமுள்ள 7 சதவீதத்தில் வண்ணார், வலையர், போயர், வேட்டுவக்கவுண்டர், பருவதராஜகுலம் (மீனவர்கள்), ஒட்டவர், ஊராலி கவுண்டர், பிரமலை கள்ளர், மறவர் உள்ளிட்ட சமூகங்களுக்கும் ஒதுக்கப்பட்டது. இந்த 7 சதவீதத்தை பிரிக்காததால் வண்ணார், போயர், ஒட்டர், வேட்டுவக்கவுண்டர், தொட்டியநாயக்கர், ஊராளி கவுண்டர் உள்ளிட்ட சமூங்களின் சமூக நீதி நசுக்கப்பட்டது.

இந்நிலையில்தான், பிரமலை கள்ளர்கள், மறவர்கள் ஆகிய சமூகங்களை சேர்ந்தவர்கள் இந்த இடஒதுக்கீட்டை ரத்து செய்யக்கோரி மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வெற்றிபெற்றுள்ளனர். இப்போது உயர் நீதிமன்றத் தீர்ப்பை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது.

கருணாநிதி முதல்வராக இருந்தபோது 1989 இல் ஒரு சமூகத்துக்கு மட்டுமே இடஒதுக்கீடு வழங்கினால் அது எதிர்காலத்தில் நீதிமன்றம் தடை செய்ய வாய்ப்பு உருவாகும் என்ற தொலைநோக்கு சிந்தனையுடன், வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்காக பிசி தொகுப்பில் இருந்து எம்பிசி தொகுப்பை தனியாக உருவாக்கி வன்னியர்கள் உள்பட பிற சமூகங்களுக்கும் சேர்த்து இடஒதுக்கீடு வழங்கினார். கருணாநிதி வழங்கிய இடஒதுக்கீட்டால், வன்னியர்கள் 3 சதவீதத்தில் இருந்து 7 சதவீதம் வரை கல்வி, வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு பெற்று இப்போது 10 சதவீதத்துக்கும் மேல் வாய்ப்பு பெற்று வருகின்றனர்.

ஆனால், வன்னியர்களுக்கு மட்டுமே இடஒதுக்கீடு வழங்காமல் பிற சமூகங்களையும் எம்.பி.சி. தொகுப்பில் சேர்த்துவிட்டார் என்றும், கருணாநிதி வழங்கியது அழுகிய மாம்பழம் என குறைகூறிய ராமதாஸின் விமர்சனம் இப்போது தவறு என்பதும், கருணாநிதி வன்னியர்களுக்கு வழங்கிய இடஒதுக்கீடு இப்போதும் எவ்வளவு சட்டப் பாதுகாப்புடன் கூடியது என்பதும் உச்ச நீதிமன்றத்தின் இப்போதைய தீர்ப்பை பார்க்கும்போது தெளிவாக புரிந்துகொள்ள முடியும்.

மேலும், கருணாநிதி முதல்வராக இருந்தகாலத்தில் அருந்ததியர்களுக்கு 3 சதவீத உள்ஒதுக்கீடு, இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கியதும் இதுவரை நீதிமன்றங்களால் தடை ஏதும் பெறப்படவில்லை. ஆனால், எடப்பாடி பழனிசாமி காலத்தில் அவசர அவசரமாக தரவுகள் இன்றி கொண்டுவரப்பட்ட வன்னியர் இடஒதுக்கீடு சட்டம் இப்போது கேள்விக்குறியாகியுள்ளது.

இனிமேல் வன்னியர் இடஒதுக்கீட்டை முறையாக சட்ட ரீதியாக செல்லுபடியாக்கும் முடிவு முதல்வர் மு.க.ஸ்டாலின் கையில் தான் உள்ளது. இந்த இடஒதுக்கீட்டை செல்லுபடியாக்க வேண்டுமெனில் வன்னியர்களுக்கான 10.5 சதவீதத்தை கூடுதலாக உயர்த்தி அதில் மேலும் சில சமூகங்களையும் சேர்க்க வேண்டும். அப்படி சேர்க்கும்போது எம்.பி.சி. பட்டியலில் உள்ள பிற சமூகங்கள் பாதிக்கப்படாத வகையில் அதை செய்ய வேண்டும். இதுபோன்ற திருத்தங்கள் செய்யும்போது தனக்கு அரசியல் ரீதியாக பின்னடைவு இல்லாமல் இருந்தால் மட்டுமே முதல்வர் ஸ்டாலினும் இவ்விஷயத்தில் ஆர்வம் காட்டுவார். இல்லையெனில் இதுவும் கிணற்றில் போட்ட கல்லாக மாறிவிடும்.

கேரளத்தில் ஈழவர்களுக்கு தனிஒதுக்கீடு, நாடார்களுக்கு தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. எந்த அரசியல் கட்சிகளும் ஈழவர்கள், நாடார்களை மையமாக வைத்து அங்கு அரசியல் கட்சி நடத்தாததால் இதுபோன்ற இடஒதுக்கீடு செய்யும்போது அதன் லாபம் நேரடியாக கேரள முதல்வர் விஜயனுக்கு கிடைத்தது.

ஆனால், வன்னியர்களை மையமாக வைத்து பாமக அரசியல் செய்வதால் இந்த விஷயத்தை நன்கு ஆராய்ந்து, லாப, நஷ்ட கணக்குகளை பார்த்து தான் முதல்வர் ஸ்டாலின் அடுத்தகட்ட அரசியல் நகர்வை செய்ய முடியும். இவற்றையெல்லாம் கூட்டி, கழித்து பார்த்தால் சாதி வாரி கணக்கெடுப்பை முழுமையாக நடத்தி இடஒதுக்கீட்டை அமல்படுத்தினால் தான் இதுபோன்ற சிக்கல்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என்பதே நடுநிலையாளர்களின் கருத்து.

> **வன்னியர் இடஒதுக்கீட்டை முறையாக சட்ட ரீதியாக செல்லுபடியாக்கும் முடிவு முதல்வர் மு.க.ஸ்டாலின் கையில் தான் உள்ளது. இந்த இடஒதுக்கீட்டை செல்லுப்படியாக்க வேண்டுமெனில் வன்னியர்களுக்கான 10.5 சதவீதத்தை கூடுதலாக உயர்த்தி அதில் மேலும் சில சமூகங்களையும் சேர்க்க வேண்டும்.**

### குரல் கொடுப்பாரா இ.பி.எஸ்?

இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, இந்தியா முழுவதும் தனி ஒதுக்கீடு விவகாரத்தைப் பொறுத்தவரை உச்சநீதிமன்றம் அதற்கு எதிராகவே உள்ளது. உதாரணமாக கேரளாவில் நாடார் இட ஒதுக்கீடு, மகாராஷ்டிரா ஹரியானாவில் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு, குஜராத்தில் பட்டிதார்களுக்கான இட ஒதுக்கீடுகளையும் உச்சநீதிமன்றம் தடை செய்துள்ளது.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் வன்னியர்களுக்கான இட ஒதுக்கீட்டை மதுரை உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் ஆகிய இரண்டு நீதிமன்றங்களும் தடை செய்துள்ளது. தற்போது இந்த இட ஒதுக்கீடு தடை செய்யப்பட்டுள்ள நிலையில் இதற்கு ஆதரவாக இந்த ஒதுக்கீட்டை கொடுத்த எடப்பாடி பழனிச்சாமி குரல் கொடுப்பாரா என்பது மிகப்பெரிய கேள்விக்குறி.

அதே வேளையில் பிரிக்கப்பட்ட இந்த 20 சதவீதத்தில் எஞ்சியுள்ள 9.5 சதவீதம் சரியாக பிரிக்கப்படவில்லை எனும் கோஷம் எழுந்து வருகிறது. குறிப்பாக 7 சதவீதம் தொகுப்பில் உள்ள வலையர், வண்ணார், வேட்டுவ கவுண்டர், ஊராளி கவுண்டர், மீனவர் போன்ற சமூகங்களுக்கு தனி ஒதுக்கீடு வேண்டும் எனும் கோரிக்கை எழுந்துள்ளது. இதுகுறித்து அரசு என்ன முடிவு எடுக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

---

100 வகையான இட்லி தயாரித்து

## ராமகிருஷ்ணா கல்லூரி மாணவர்கள் அசத்தல்

தி கோவை மெயில்

ஸ்ரீராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியில் உணவு மற்றும் விடுதி மேலாண்மைத் துறை சார்பில் இட்லி திருவிழா நடைபெற்றது.

ஆண்டு தோறும் மார்ச் மாதம் 30ம் தேதி உலக இட்லி தினம் கடைபிடிக்கப்படுகிறது. இட்லியில் உள்ள நன்மைகள் குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனையொட்டி ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியில் பாரம்பரிய இட்லி திருவிழா கொண்டாடப்பட்டது.

இதில் கல்லூரியின் உணவு மற்றும் விடுதி மேலாண்மைத்துறை மாணவ மாணவிகள் 100 விதமான இட்லிகளையும், அதற்கேற்ப சுவையான 20 விதமான சட்னி, சாம்பாரையும் தயாரித்து அசத்தினர். இத்திருவிழாவிற்கு கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலர் சிவக்குமார் தலைமை வகித்தார். ஐக்கிய நாட்டில் உள்ள லீமிங்டன் ஸ்பா நட்சத்திர விடுதியின் சமையல் கலை நிபுணர் உமா சங்கர் பாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, இட்லி திருவிழாவைத் தொடங்கி வைத்தார். இதில் பாரம்பரிய இட்லிகள் இடம் பெற்றிருந்தன.




கல்லூரியில் நடைபெற்ற இட்லி திருவிழாவினை சிறப்பு விருந்தினர் பார்வையிட்ட போது.

சிறப்பு விருந்தினர் பேசுகையில், மாணவர்கள் ஒரு மிகப்பெரிய காரியத்தை செய்துள்ளனர். அவர்களின் ஸ்டாலை நான் பார்வையிட்டேன். இட்லிகளை பிரமாதமாக சமைத்துள்ளனர். நிச்சயமாக இங்கிருந்து பல இளம் சமையல் நிபுணர்கள் உருவாகுவார்கள், சாதிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை மீண்டும் அதிகப்படியான மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு இது ஒரு முயற்சியாக இருக்கும் என தெரிவித்தார்.

கல்லூரி முதல்வர் கூறுகையில், உலக இட்லி தினத்தை கொண்டாடும் வகையில், எங்கள் மாணவர்கள் 100 விதமான இட்லிகளை தயாரித்துள்ளனர். இதற்கான முயற்சிகளை மாணவர்கள் எடுத்து வந்தனர். அவர்களின் முயற்சிக்கு என் பாராட்டுகள் எனக் கூறினார்.

---

## கே.பி.ஆர் கல்லூரியில் ரேக்ளா ரேஸ்

தி கோவை மெயில்

கோவை, கே.பி.ஆர் கல்வி நிறுவனங்கள் மற்றும் ரோட்டரி கோயம்புத்தூர் சென்ட்ரல் இணைந்து நடத்தும் மூன்றாம் ஆண்டு காளையர் திருவிழா எனும் ரேக்ளா போட்டி கே.பி.ஆர் கல்லூரியில் நடைபெற்றது.

போட்டியை கே.பி.ஆர் கல்வி நிறுவனங்களில் தலைவர் கே.பி.ராமசாமி தொடங்கி வைத்தார்.

இப்போட்டி 200 மீட்டர் மற்றும் 300 மீட்டர் என இரு பிரிவுகளில் நடைபெற்றது. இப்போட்டியில் கோவை, தமிழ்நாட்டின் பிற மாவட்டங்கள் மற்றும் கேரளாவில் இருந்தும் சுமார் 300க்கும் மேற்பட்ட வண்டிகள் பங்கு பெற்றன.

இப்போட்டியில் முதல் பரிசு பெற்ற காளைகளுக்கு ஹோண்டா ஆக்டிவா வண்டியும், இரண்டாம் பரிசு பெற்ற வண்டிக்கு இரண்டு பவுன் தங்க நாணயமும், மூன்றாம் பரிசு பெற்ற வண்டிக்கு ஒன்றரை பவுன் தங்க நாணயம் என முதல் பத்து இடங்கள் வரை வெற்றி பெற்ற வண்டிகளுக்கு தங்க நாணயம் பரிசாக வழங்கப்பட்டது.

இப்பரிசுகள் 200 மீட்டர் மற்றும் 300 மீட்டர் என இரண்டு பிரிவினருக்கும் தனித்தனியாக வழங்கப்பட்டது.

இப்போட்டியில் கே.பி.ஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் அகிலா, கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்லூரியின் முதல்வர் பாலுசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.